1981 ஏப்ரல் 14]

மாண்புமிகு திரு ஆர். எம். வீரப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அணைக்கட்டுகள் பொதுப்பணித் துறையினரால் நிர்வகிக்கப்பட்டு வருகின்றன. அங்கே எந்த விதமான பணிகள் மேற்கொள்ளப்பட வேண்டுமானாலும் சீர்திருத்தப் பணிகள் செய்து அழகுபடுத்தும் பணிகள் பற்றி பொதுப்பணித் துறையினரிடத்திலே தான் கேட்கப்பட வேண்டும்.

மதுரை யானைக்கல் பாலம் அருகில் வைகையாற்றின் நடுவிலுள்ள மண்டபத்தைப் புதுப்பித்தல்

*வினா எண். 748 திரு. ப. நெடுமாறன்: மாண்புமிகு செய்தி அறநிலைய அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

மதுரை நகரில் யானைக்கல் பாலம் அருகில் வைகையாற்றின் நடுவில் இடிந்து கிடக்கும் மைய மண்டபத்தைப் புதுப்பிக்கும் செயற்குறிப்பு ஏதும் ஆய்வில் உள்ளதா?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்: மதுரை நகரில் யானைக்கல் பாலம் அருகில் வைகை ஆற்றின் நடுவில் உள்ள மைய மண்டபத்தைப் புதுப்பிக்கும் செயற்குறிப்பு ஏதும் பரிசீலனையில் இல்லை.

திரு. ப. நெடுமாறன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மதுரை வைகை ஆற்றின் நடுவில் இருக்கக் கூடிய மைய மண்டபம் திருமலை நாயக்கர் காலத்தில் கட்டப்பட்டது. அதனுடைய பக்கச்சுவர்கள் இடிந்து, சரிந்துக் கிடக்கின்றன. திருவிழா காலங்களில் மக்கள் அங்கே கூடுகிறார்கள். மதுரை நகரில் இருக்கக்கூடிய மக்கள் மாலை நேரங்களில் அங்கே ஓய்விற்காக சென்று வருகிறார்கள். ஆற்றில் அமைந்திருக்கக்கூடிய அந்த மண்டபத்தில் அழகிய சிற்பங்கள் அதிகமாக இருக்கின்றன. இந்த மண்டபத்தினை பாதுகாக்கக் கூடிய முயற்சிகளை அரசு எடுக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு ஆர். எம். வீரப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த மண்டபம் யாரால், எப்போது கட்டப்பட்டது என்ற விவரங்கள் ஆவணங்களில் இல்லை என்று தெரிவிக்கிறார்கள். மேற்படி ஆலயத்தில் ஒவ்வொரு ஆண்டும் மாசி உற்சவத்தில் பெரிய சுவாமி 10ஆம் நாள் மாசி மகத்தன்று இம் மண்டபத்தில் ரிஷப வாகனத்தில் எழுந்தருளி தீர்த்தம் கொடுப்பது வழக்கம். ஆனால் 1962 ஆம் ஆண்டிலிருந்து இம்மண்டபத்தில் எழுந்தருளுவது இல்லை. மேலும் குறிப்பிட்ட 10 ஆம் நாள் மண்டபகப்படி நகரத்தாரால் நடத்தப்பட்டு வந்தது, ஆனால் 1961 முதல் நகரத்தார்களும் நிறுத்தி விட்டனர். ஆகவே அது இப்போது புழக்கத்தில் இல்லாத காரணத்தாலே மேலும் செலவு செய்ய வேண்டாம் என்று தீர்மானித்து இருக்கிறார்கள்.

[1981 ஏப்ரல் 14

திரு. ப. நெடுமாறன்: தலைவர் அவர்களே, மண்டபம் இடிந்து விழுந்துவிட்டக் காரணத்தினால் மாசி திருவிழா இதில் நடைபெறுவது நிறுத்தப்பட்டது. அதற்குப்பிறகு சில ஆண்டுகள் மண்டபத்திற்கு முன்னால் பந்தல் அமைக்கப்பட்டு அதில் திருவிழா நடந்தது. இப்போது அதுவும் நிறுத்தப்பட்டு விட்டது. ஆகவே திருவிழா இந்த மண்டபத்தில் நடைபெறும் வகையில் அரசு ஏற்பாடுகள் செய்யுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த மண்டபத்தை உபயோகப்படுத்துகிற முறை பற்றி ஆலய நிர்வாகிகள், ஆலய அறங்காவலர்களாலே தீர்மானிக்கப்பட வேண்டிய ஒன்று. கடந்த 18 ஆண்டுகளாக அது உபயோகமில்லாமல் இருக்கிறது என்பதாலே தான் அது பழுதடைந்து இருக்கிறது. மேலும் இரண்டு இலட்சம் ரூபாய் வரையில் செலவாகும் என்று திட்டமிட்டு அந்தத் செலவை செய்ய வேண்டாமென்று முடிவு எடுத்திருக்கிறார்கள் என்ற குறிப்பு இருக்கிறது. ஒருவேளை மீண்டும் அதை பயன்படுத்துவதால் நலன் பயக்கும் என்ற எண்ணம் இருக்குமேயானால் அந்த மீனாட்சி சுந்தரேஸ்வரர் ஆலயத்திற்கும், அதனுடைய அறங்காவலர்களுக்கும் அறநிலையத் துறை மூலமாக இந்த செய்தியைச் சொல்லி, பயனளிக்கும் வகையில் இருந்தால் அந்த நடவடிக்கையை மேற்கொள்ளும்படி அறங்காவலர்களையும், ஆலய நிர்வாகத்தையும் அறநிலையத் துறை கேட்டுக் கொள்ளும்.

திரு. இரா. தாமரைக்கனி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வெள்ளம் வருகின்ற காலத்தில் வைகை ஆற்றில் மக்கள், வெள்ளத்தினால் அடித்துச்செல்லப் படாமல் இருப்பதற்காக இந்த மண்டபத்தில் ஒதுங்கி நிற்கிறார்கள். ஆதலால் புயல் பாதுகாப்பு இல்லம் மாதிரி அந்த மணடபத்தை வெள்ளப் பாதுகாப்பு இல்லமாக வைகையாற்றின்கரையிலே அமைக்கக்கூடிய வகையிலே அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்: பேரவைத் தலைவர் அவர்களே, அந்த மணடபம் வைகையாற்றின் நடுவிலே இருக்கிறது, ஆகவே வெள்ளப்பாதுகாப்பு மண்டபமாக அது இல்லை. ஆண்டவன் அங்கே போயத் தங்கி விசேஷங்கள் நடத்துவதற்காகத்தான் அந்த மண்டபங்கள் எழுப்பப்பட்டிருக்கின்றன.

தொப்பையாற்றின் குறுக்கே பாலம்

*வினா எண் 677 திரு. செ. செம்மலை: மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) தொப்பையாற்றின் குறுக்கே நெடுஞ்சாலைத் துறையின் மூலம் பாலம் கட்டும் பணி எந்த நிலையில் உள்ளது?